
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1120**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**45**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

*1987-ஆம் ஆண்டு, செப்டம்பர் 17-ஆம் தேதி, அண்ணா அறிவாலயம் திறப்பு விழா எனக் கழகம் பெரும் கொண்டாட்டத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வேண்டும் எனத் தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் போராட்டம் வெடித்தது. அந்தப் போராட்டத்தை அன்றைய ஆட்சியாளர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாததன் விளைவாக, காவல் துறை துப்பாக்கிச்சூடு, கொடும் அடக்குமுறைகள் நடந்தன. அப்படியும் அந்தக் கோரிக்கை நிறைவேறாமலேயே இருந்தது.*

*1989-ஆம் ஆண்டு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களில் பெரும்பான்மையினர், தேர்தல் புறக்கணிப்பு என்கிற போராட்டத்தை முன்னெடுத்தபோது, 'தேர்தல் முடிந்து தி.மு.க. அரசு வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததும் அவர்களின் நியாயமான கோரிக்கையை, உரிய சமூக நீதியைப் பின்பற்றி இட ஒதுக்கீடு வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தார் கலைஞர்.*

*சொன்னதுபோலவே, 1989-இல் ஆட்சி அமைந்ததும், அடுத்த 43 நாட்களில், 'மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும் 20 சதவிகித தனி இட ஒதுக்கீடு' செய்யப்படும் என்கிற மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை வெளியிட்டார் கலைஞர்.*

### இனிக்கும் கனி!

*குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் பட்டியலை நீதியரசர் சட்டநாதன் பரிந்துரையின்படி மறுசீரமைத்து, பிற்படுத்தப்பட்ட பட்டியலில் இருந்த சில சமூகங்கள் பிரிக்கப்பட்டு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் என்கிற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது. இந்த மாற்றம் அரசாணைகள்மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால், தமிழ்நாட்டில் மொத்த இடஒதுக்கீடு 69 சதவிகிதமாக உறுதிசெய்யப்பட்டது. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தத் தீர்வின்போது, 'நான் ஒரு கனி தருகிறேன், அதை சுவைத்துப் பாருங்கள்; புளித்தால் மாற்றித்தருகிறேன்' எனத் தனக்கே உரிய பாணியில் கலைஞர் குறிப்பிட்டார் எனப் பதிவு செய்துள்ளார், வன்னியர் கூட்டமைப்பின் தலைவர் சி.என்.ராமமூர்த்தி.*

*இப்படி, தமிழ்நாட்டின் இடஒதுக்கீட்டு அமைப்பு நடைமுறையில் இருந்தபோதுதான், மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்கு எதிராக நாடு முழுவதும் சட்டப்போராட்டங்கள் அதிகரித்தன. குறிப்பாக, மண்டல் கமிஷன் பரிந்துரைத்த இட ஒதுக்கீட்டினை எதிர்த்து, பல நூறு வழக்குகள் உச்ச நீதிமன்றம் வரை சென்றன. அவற்றை ஒருங்கிணைத்து, 1992-ஆம் ஆண்டு, இந்திரா சஹானி (INDRA SAWHNEY) வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், பொதுவாக மாநிலங்களில் அளிக்கும் இடஒதுக்கீடு 50 சதவிகிதத்தை மீறக்கூடாது என்றது, இந்தத் தீர்ப்பு, தமிழ்நாட்டின் 69 சதவிகித ஒதுக்கீட்டுக்கு சட்டரீதியான சவாலை உருவாக்கியது.*

*இந்த நெருக்கடியை அன்றைய அம்மையார் ஜெயலலிதா ஆட்சி சரியாகக் கையாளவில்லை. குறிப்பாக, 1993-ஆம் ஆண்டு, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், 'உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்று, தமிழ்நாட்டில் 93-94 -ஆம் ஆண்டு 50 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்க அரசின் சார்பில் சம்மதம்' தெரிவித்திருந்தது.*

### கலைஞர் தந்த அழுத்தம்

*இதையடுத்து, தமிழ்நாட்டின் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைக் காப்பாற்ற, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்கிற கோரிக்கைக்கு ஆதரவு கேட்டு, இந்திய அளவில் அனைத்து கட்சித் தலைவர் களுக்கும் கடிதம் எழுதி, அழுத்தம் கொடுத்தார் கலைஞர். மாநில அரசு, ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன் கழகத்தின் சார்பில் மறியல் போர் நடத்தி அழுத்தம் தந்தார்.*

*அதன்பின்னரே தமிழ்நாடு அரசு சார்பில், 'Tamil Nadu Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes (Reservation of Seats in Educational Institutions and of Appointments or Posts in the Services under the State) Act' என்ற பெயரில் சட்டத்தைக் கொண்டுவந்து, 69 சதவிகித ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது. பின்னர், 1994-ஆம் ஆண்டில் 'Tamil Nadu Act 45 of 1994' என அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.*

*இந்த மாநில சட்டம், நீதிமன்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருந்ததால், ஒன்றிய அரசுடன் இணைந்து தமிழ்நாடு அரசு, அதை அரசியலமைப்பின் 9-வது அட்டவணையில் சேர்க்க முயற்சி செய்தது. இதன் விளைவாக, இந்திய அரசியலமைப்பின் 76-வது திருத்தச் சட்டம், 1994-இல் கொண்டுவரப்பட்டது. அந்தத் திருத்தத்தின்மூலம் தமிழ்நாடு இட ஒதுக்கீட்டு சட்டம் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்ட சட்டங்கள், அரசமைப்புச் சட்டத்தால் பாதுகாப்பு பெறுகின்றன. இப்படி, பலகட்ட போராட்டங்களுக்குப் பின்னர், தமிழ்நாட்டின் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு அமைப்பு சட்டரீதியாக நிலைபெற்றது.*

*தி.மு.கழகத்தின் தொடர்ச்சியான அழுத்தங்களே காரணம் என, அன்று பத்திரிகைகள் கலைஞரைப் பாராட்டின.*

*1989-ஆம் ஆண்டு, இட ஒதுக்கீடு மறுசீரமைப்பில் அளிக்கப்பட்ட 20 சதவிகித பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு, கல்வி, வேலைவாய்ப்புகளில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியது. தமிழ்நாட்டின் சமூக நீதி போராட்டத்தில் கலைஞர் நிகழ்த்திய அந்த மாற்றம் காலங்கள் கடந்தும் நிற்கும்!*

...தொடரும்

## வாக்குறுதியை நிறைவேற்றி கலைஞர் தந்த கனி!

ஓவியம் : ரவி பேலட்




### திசை மாற்றிய கலைஞர்!

1987-ஆம் ஆண்டு, பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டு கோரி நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் இழப்பீட்டு கருணைத் தொகையும், மாதந்தோறும் 1,500 ரூபாய் உதவித் தொகையும் அளித்தார் கலைஞர். அந்த உதவித்தொகை இன்று 3,000 ஆக அளிக்கப்படுகிறது. தவிர, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை ரத்துசெய்து, சிறையில் இருந்தவர்களை விடுவித்ததும் கலைஞர்தான். அப்படி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2 லட்சத்துக்கும் அதிகம். அதன்மூலம் அவர்களின் வாழ்க்கையைத் திசை மாற்றியவர் கலைஞர். உயிரிழந்தவர்களுக்கு விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 5.70 கோடி ரூபாய் செலவில் மணிமண்டபம் அமைத்து, அதைத் திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

> **“பிற்படுத்தப்பட்ட இட ஒதுக்கீடு, கல்வி, வேலைவாய்ப்புகளில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியது. தமிழ்நாட்டின் சமூக நீதி போராட்டத்தில் கலைஞர் நிகழ்த்திய அந்த மாற்றம் காலங்கள் கடந்தும் நிற்கும்!”**

## இரட்டை என்ஜின் ஆட்சியில், பாடப் புத்தகங்கள் நிலை?



**உ**த்தரப்பிரதேச மாநிலத்தில், பள்ளி மாணவர்களுக்கு வழங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட நூல்கள், பழைய பொருட்கள் விற்பனைக் கடையில் விற்கப்பட்ட நிகழ்வு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. சமூக வலைதளங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பஹ்ரைச் மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்து, ஒரு சரக்கு வாகனம் நிறைய பாடப்புத்தகங்களை ஏற்றி, அப்படியே பழைய பொருட்கள் விற்கும் கடைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, கிலோ 4 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தப் புத்தகங்கள், சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் அச்சிடப்பட்ட புதிய புத்தகங்களாகும். இந்தத் தகவல்கள் வெளியானதும் சில அதிகாரிகள் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நூல் கள் சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் அச்சிடப்பட்டவை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு தமிழ்நாட்டுக்கு அளிக்க வேண்டிய ரூ.2,152 கோடியை குஜராத்துக்குத் திருப்பியது ஒன்றிய அரசு. தவிர, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு அதிக நிதியும், தமிழ்நாட்டிற்கு நிதி தருவதில் பாரபட்சமும் காட்டிவருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆனால், டபுள் என்ஜின் அரசு என அவர்கள் ஆளும் மாநிலங்களில் பள்ளிக்கூடங்களின் நிலையும் பாடப்புத்தகங்களின் நிலையும் எந்த அளவுக்கு மோசமாக உள்ளன என்பதை இந்தச் சம்பவம் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### பரபரப்புக்கு இடையிலும் ஒரு சந்திப்பு!



ராசி அழகப்பன்

1996-ஆம் ஆண்டு, தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்கவிருந்த நேரம். அடுத்த நாள் பதவியேற்பு என்கிற நிலையில், கலைஞர் அவர்களைச் சந்திக்க திரைத்துறையில் இருந்து ரகுவரன், நாசர், இளையபாரதி ஆகியோருடன் நானும் சென்றிருந்தேன். பரபரப்புக்கு இடையிலும் எங்களிடம் 30 நிமிடங்களுக்கு மேல் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார். முத்தமிழறிஞர் கலைஞருடனான அந்த சந்திப்பு மறக்க முடியாதது.

**– ராசி அழகப்பன், இயக்குநர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நெஞ்சுக்கு நீதி!

1967-ஆம் ஆண்டு முதல் 1977-ஆம் ஆண்டு வரை, திரையுலகில் நேரடியாகப் பங்கு பெறாமல் இருந்த கலைஞர், 1978-ஆம் ஆண்டு பிப்ரவரியில், மீண்டும் திரையுலகில் நேரடியாகக் களம் கண்டார். கலைஞரின் நண்பர், இயக்குநர் கிருஷ்ணன் பஞ்சு அவர்களின் ஏற்பாட்டில் 'நெஞ்சுக்கு நீதி' திரைப்படம் உருவானது. 1978 பிப்ரவரி மாதம் 20-ஆம் தேதி, படத்தின் தொடக்க விழா நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131